இதழ்-68

01.02.2024

பல்சுவை மின்னிதழ்



# பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்துளை...

03 வெள்ளம் வருமுன் தான் அணை கட்ட வேண்டும்
06 மின்சாரம் உள்ளவரை அந்தக் காதல் நிலைக்கும்
09 ஈழக்குயிலே கவனம்
11 SME வளர்ச்சிக்கான அரசாங்கத்தின் கொள்கைகள்
15 தற்கொலைகளால் தடமழியும் தலைமுறைகள்
18 தொடர்ச்சியாக நடைபெறும் துர்க்காதேவி வீட்டுத்திட்டம்
19 கம்பருக்கு பதிலடி கொடுத்த ஔவையார்
20 டெரிடாவின் கட்டவிழ்ப்பு நோக்கில் பாலினக்
31 என் கால்கள் வழியே...
34 மனங்கள் மாற வேண்டும்
38 சாதனை வீரன் சமார் ஜோசப்
40 ஜானிக் சின்னர் ஒரு கிராண்ட் ஸ்லாம் சாம்பியன்




# வெள்ளம் வருமுன் தான் அணை கட்ட வேண்டும்






அண்மைக் காலமாக டெங்கு நோயினால் கணிசமான உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதோடு பெருமளவான மக்கள் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த நோய் பரவ மூல காரணம் எமது சமூகப் பொறுப்பற்ற செயற்பாடுகளால் ஆகும். சுகாதார வைத்திய பரிசோதகர்களுக்கும், தண்டப் பணத்திற்கும்பயந்து சூழலை சுத்தமாக வைத்திருப்பதாக காட்டுகிறோமே தவிர, நாமாக உணர்ந்து அவர்கள் பரிசோதனைகளுக்கு முன்பதாகவே செயற்படுகிறோமா என்றால் இல்லை என்பதே பதிலாகின்றது.

எனவே எங்கள் மத்தியில் சமூக விழிப்புணர்வு ஏற்பட்டால்த்தான் சமூகப்பொறுப்பின் அவசியத்தை உணரக்கூடியதாக இருக்கும். அதற்கு முதலில் சாகாவரம் போன்றதொரு வரத்தை பெற்றிருக்கும் டெங்கு நுளம்புகளைப் பற்றி அறிந்து வைத்திருப்பது அவசியமாகும்.



டெங்கு நோய் என்பது வைரஸ் மூலம் பரவுகின்ற ஒரு நோய் என்பதுடன் நோய்த்தொற்றுள்ள ஒரு நுளம்பு காவியாக செயற்படுகிறது. கட்டமைப்பு ரீதியாக இது மிகச் சமமான போதும் நோயைப் பரப்புவதில் வித்தியாசமான வைரஸ்கள் செயற்படுகின்றன. (DEN 1, DEN 2, DEN 3, DEN 4) டெங்கு தொற்றுவதன் மூலம் ஏற்படும் நோய் நிலைமைகள் மிகப் பெரிய வீச்சினுள் விரிந்து செல்வதுடன் சில நபர்களிடம் எந்தவித நோய் அறிகுறிகளும் தென்படமாட்டாது என்பதுடன் இன்னும் சிலரிடம் நோய் அறிகுறிகள் தென்படும்.

இலங்கையில் தற்போது 140 வகையான நுளம்பு இனங்கள் காணப்படுவதுடன் ஈடிஸ் ஈஜிப்டை மற்றும் ஈடிஸ் எல்பொபிக்டஸ் ஆகிய இரண்டு நுளம்பு வகைகள் மாத்திரம் டெங்கு நோய் வைரஸை பரப்புவதில் பங்களிப்புச் செய்கிறது. இவ் இரண்டு நுளம்பு வகைகளை அவற்றின் உடம்பில் காணப்படும் அடையாளம் காரணமாக இலகுவில் இனங் காணலாம்.

ஈடிஸ் நுளம்பின் முட்டைகளுக்கு பாதகமான சூழல் மற்றும் காலநிலை நிலைமைகளினைப் பொறுத்துக்கொண்டு பல மாதங்கள் சாகாமல் வாழ்வதற்குரிய விசேட ஆற்றலைக் கொண்டுள்ளதுடன்

இதன் காரணமாக நுளம்பின் குடம்பி சந்தர்ப்பம், கூட்டுப்புழு சந்தர்ப்பம் மற்றும் நிறைவுடலி சந்தர்ப்பங்கள் அழிக்கப்பட்டாலும் நுளம்பின் முட்டைகள் தேங்கியுள்ள கொல்கலனொன்றில் நீர் விழுந்ததும் முட்டை வெடித்து மீண்டும் நுளம்புகள் பெருகக் கூடிய ஆற்றல் காணப்படுகிறது. துரதிஷ்டவசமாக கொல்கலன்களில் ஒட்டியுள்ள முட்டைகளை அழிப்பதற்கான விசேடமான ஒரு முறைமை காணப்படவில்லை. நுளம்பின் வாழ்க்கைச் சக்கரத்தில் காணப்படும் இவ்வாறான இயல்புகளின் மாற்றங்களின் காரணமாக பெரும்பாலான சந்தர்ப்பங்களில் டெங்கு நுளம்புகளை இல்லாதொழித்தலானது இலகுவான காரியமல்ல.

எமது பகுதிகளில் டெங்கை ஒழிப்பதாயின் முதற்கட்டமாக டெங்கு நுளம்புகளைப் பற்றிய மேற் கூறிய விழிப்புணர்வு மக்களுக்கு வர வேண்டும். அப்போது தான் நீரில்லாத கொள்கலன்களிலும் அவை மாதக் கணக்காக உறங்குநிலையில் இருந்து விட்டு, மழையையோ நிரையோ





கண்டவுடன் உயிர்பெற்று வரும் உண்மையை உணர்ந்து கொள்ள முடியும். அப்போது தான் அதற்கான தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

நுளம்பை கூட்டம் கூட்டமாக பெருக விட்டுவிட்டு, பெருகிய நுளம்பை அழிக்கவும், நுளம்பிடம் கடிவாங்காமல் ஓடி ஒளிக்கவும் வழி தேடுவது முட்டாள்தனம். வீட்டுச் சூழலை இயன்றவரை என்று இல்லாமல் கட்டாயமாக சுத்தமாக வைத்திருங்கள். நுளம்பிற்காக மட்டும் இதை சொல்லவில்லை. சுத்தமான சூழல் உங்களை வேறு நோய்நொடிகள் அணுகாமலும் தடுக்கும். உடல் ரீதியாக மட்டுமன்றி உள ரீதியாகவும் உங்களை பலப்படுத்தும் ஆற்றல் சுத்தத்திற்கு உண்டு.

குறிப்பாக கழிவு நீர் செல்லும் பாதைகள், மழை நீர் செல்லும் பீலிகளின் சுத்தத்தை அடிக்கடி கவனிக்க வேண்டும். அதோடு வெட்டி வீழ்த்தப்பட்ட வாழையின் அடிப்பகுதியிலும் நீர் தேங்காமல் மண் போட்டு மூட வேண்டும். இவ்வாறு ஏனைய நீர் தேங்கும்

வழிகளையும் தேடித்தேடி இல்லாமல் செய்ய வேண்டும்.

அதோடு எமது பகுதிகளில் பயன்பாடற்ற காணிகள் பல உள்ளன. வருடக்கணக்கில் ஆள் நடமாட்டம் இல்லாததில் பற்றைகள் வளர்ந்து நுளம்புகள் பெருக பெருமளவில் பங்களிப்பு செய்கின்றன. அக்காணிகளை தயவு செய்து பயன்பாட்டிற்கு கொண்டுவாருங்கள். அல்லது குத்தகைக்கு கொடுங்கள். தானியங்களும் மரக்கறிகளும் விளைய வேண்டிய விவசாய நிலங்களில் நுளம்புகள் விளைந்து, மக்களை கொல்கின்றன.

எனவே, எங்களால் செய்யக்கூடிய கருமங்களை முதலில் செய்து முடித்து விட வேண்டும். அப்போது அரச திணைக்களங்கள் தாமாக தங்கள் கடமைகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

**’உலகத்தின் மிகப்பெரிய சொல் செயல்.’**

## நிலவில் சாதனை






நிலவின் தென் துருவத்தில் ஆய்வு செய்ய இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகமான இஸ்ரோ அனுப்பிய சந்திரயான்-3 விண்கலத்தை கடந்த ஆண்டு ஆகஸ்டு 23-ந்தேதி வெற்றிகரமாக தரையிறங்கியது. விண்கலத்தின் விக்ரம் லேண்டரில் இருந்து பிரக்யான் ரோவர் ஆய்வுகளை மேற்கொண்டது. 14 நாட்களுக்கு பிறகு சூரியன் அஸ்தமனமானதால் விக்ரம் லேண்டரும், பிரக்யான் ரோவரும் தூக்க நிலைக்கு சென்றதாக அறிவிக்கப்பட்டது.இந்த நிலையில் நிலவின் மேற்பரப்பில் உள்ள விக்ரம் லேண்டருடன் லேசர் கற்றை மூலம் தொடர்பை ஏற்படுத்தியதாக நாசா தெரிவித்துள்ளது. நிலவின் மேற்பரப்பில் சுற்றி வரும் நாசாவின் லூனார் ரீகனைசென்ஸ் ஆர்பிட்டருக்கும் (எல்.ஆர்.ஓ.) விக்ரம் லேண்டருக்கும் இடையே ஒரு லேசர் கற்றை அனுப்பப்பட்டு பிரதிபலிக்கப்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக நாசா கூறும்போது, நாசாவின் லூனார் ரீகனைசென்ஸ் ஆர்பிட்டர், அதன் லேசர் அல்டிமீட்டர் கருவி, விக்ரம் லேண்டரை நோக்கி சுட்டிக்காட்டியது. அப்போது ஆர்பிட்டரில் இருந்து விக்ரம் லேண்டர் 100 கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது. லேசர் கற்றையை கடக்கும்போது அந்த ஒளி விக்ரம் லேண்டரில் பதிந்து பின்னர் அந்த ஒளியை ஆர்பிட்டர் பதிவு செய்தது. நிலவின் சுற்றுப்பாதையில் இருந்து மேற்பரப்பில் பின்னோக்கி பிரதிபலிப்பை கண்டறிய முடியும் என்பதை நாங்கள் காட்டியுள்ளோம். இது வருங்காலத்தில் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான அடுத்த கட்டமாகும். இவ்வாறு நாசா தெரிவித்தது.

## மின்சாரம் உள்ளவரை

# அந்தக்காதல் நிலைக்கும்.

அந்த பூங்காவின் ஒவ்வொரு இருக்கைகளிலும் இருந்து ஒவ்வொரு விதமாக அவர்களை கவனிப்பது இப்போது கொஞ்சகாலமாக என் வழக்கமாக போய்விட்டது. எத்தனை மகிழ்வானவர்கள் அவர்கள்!

ஒளித் தெறிப்பின் ஓவியம் போன்றிருக்கும் அவர்களின் அருகில் இருக்கையில் எனக்கே நான் சிலவேளைகளில் பரிதாபமாகத் தெரிகிறேன்.

அவன் இராஜ உடை. இராஜ கம்பீரம். இன்பத்தின் எல்லைகளை இன்னும் நீட்டுவதற்காய் கைகளை விரிக்கிறான். ஆனால் அவனது இன்பத்தின் துளி அவன் கண்களிலல்லவா குவிந்து மின்னுகிறது. ஏனோ அவன் பெயரை பற்றி நான் சிந்தித்ததே இல்லை. அவனை யாரோ ஒருவனாக நினைப்பதாலே அவனைப் பற்றி எனக்கு நினைக்கத் தோன்றுகிறது. அதனால் அவனுக்கு “அவன்” என்றே பெயரிடுகிறேன்.

அவன் கையருகே நிலா போல் கண்ணருகே அவள். சென்றவாரம் தான் புரிந்தது. அவளும் அவனைக் காதலிக்கிறாள். ஆம் இந்த விடயத்தை புரிந்து கொள்வதில் நான் கொஞ்சம் தமாதமானவன் தான். அந்த விவேகம் எனக்கிருந்தால் எத்தனையோ நாட்களை என் வாழ்நாளில் வீணாக்கியிருப்பானே.. சரி, என் கதை எதற்கு! எல்லாவற்றையும் முடித்துக் கொண்டுதானே கடல் கடந்து வந்து விட்டேன். உழைப்பும் உறக்கமுமே வாழ்வென்றான இந்த சிங்கப்பூர் நாட்களில் தான் இவ்வழியே ஒருநாள் இந்த ஒளிச் சிற்பத்தைக் கண்டேன். கண்டதும் ஏனோ நின்று விட்டேன். அன்று முதல் என்ன வியோதியோ தெரியாது தினமும் இப்படி வந்து இந்த வெளிச்சக் காதலர்களை வெறித்துப் பார்ப்பது தான் என் மாலை வேலையாகிவிட்டது.



சரி.. சரி! என்னை பற்றி விடுங்கள்.. அவளைப் பாருங்கள்! அவள் அவனை எந்தளவிற்கு காதலிக்கிறாள் என்று உங்களால் காண முடிகிறதா?
அது அவனுக்கும் எனக்கும் மட்டுமே தெரியும் ரகசியமாகும். எனக்கெப்படித் தெரியும் என்கிறீர்களா? ஒரு இரவில் கண்டுபிடித்தேன்.

ஒரு நாள் முழு இரவும் இப்படியே பார்த்துக் கொண்டே இருந்தேன். மெல்ல மெல்ல என் பார்வையை விட்டு மறையத் தொடங்கினர் இருவரும். விடியல் தொடங்கியது.
சூரிய ஒளி புற உலகை உயர்த்தி விட்டதால், அழகிய அக உலகு தாழ்ந்து கொண்டிருந்தது.

என்னால் அவர்களது சங்கடத்தை புரிய முடிந்தது.

சம்பந்தமே இல்லாமல் அவனது தொழில் பற்றியும் குடும்பத்தை பற்றியும் சிந்தித்தேன். பாவம் அன்றைய வயிற்றுக்காக என்ன தொழில் செய்வான் அவன்? இல்லை இல்லை ஏன் பாவம்?தொழிலை செய்து வயிற்றை நிரப்பி வாழ்வதெல்லாம் ஒரு வாழ்வா? அப்படிஒரு வாழ்வை வாழ்ந்து அங்கும் இங்கும் உழன்று கொண்டிருக்கும் எத்தனையோ பேர் வாழ்வில் மகிழ்ச்சி என்ற சொல்லே மறந்து போயிருக்கிறது. இந்த உலகில் யார் தான் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்? அவன் வாழ்கிறானே ஒரு வாழ்வு - அதைப்போலொரு வாழ்வு யாருக்கு வாய்க்கும்! வாழ்வதாரமே இல்லாதவன் வாழ்வில் ஆதாரமாய் நிற்கும் அவளைப்போல் இங்கு யாராவது இருக்கிறார்களா? காதலிற்காக எதையும் செய்வார்கள்! கத்தியெடுத்து கையை கிழித்து கூட தம் காதலை நிரூபிக்க தவறாதவர்கள் - தன் காதலன் சமூகத்தில் தன்னை நிரூபிக்கும் வரை காத்திருக்கத்தான் மாட்டார்கள்! காதலில் நம்பிக்கை உண்டு காதலனிடத்தில் நம்பிக்கை இல்லை.

***காதலை விட பெரியது காலம். காலம் தவறிவிட்டால் காதலென்ன? காட்சியென்ன?*** “நிதர்சனத்தை புரிந்து கொள்ளுங்கள்” எதார்த்தமான உலகில் எல்லா பேரன்பும் சென்று முடிவடைகிற கடைசி வார்த்தைகள் இவைதான். எனக்கு இதுவரை நிதர்சனமும் புரிந்ததில்லை. எதார்த்தமும் தெரிந்ததில்லை.

அன்று எது இல்லையோ என்னிடம் “அது” இன்று இருக்கிறது. ஆனால் அன்று இருந்த வாழ்வின் இன்பம் ஒன்று கூட இன்றில்லை. இருந்திருந்தால் இந்த பொம்மைகளின் அருகில் நின்று இப்படி ஏன் புலம்பப் போகிறேன்.

இருப்பவன் தான் ஆசையும் படலாம் என்று சூத்திரம் வகுத்துள்ள சமூகத்தை எரிக்கலாம் என்று தோன்றுகிறது.

உழைக்கும் வழியறியா அவனை தன்னவனாக்கி ஒளி வீச வைத்த இந்த தலைவியின் காதல் “பெரியது” என்று நான் சொன்னது ஏனென்று புரிந்ததா?

புரியாவிட்டால் பரவாயில்லை. காதலிப்பவர்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்திருந்தால் காதல்

என்றைக்கோ அழிந்திருக்குமாம். அறியாமை காதல் அல்ல. புரியாமை தான் காதல். நானும் அப்படித்தான் நம்பியிருந்தேன். ஆனால் இல்லாமையில் நிலையாமைதான் காதல் என்று நிரூபித்தது அன்றைய என் நிலை.

எதுவும் இல்லாமல் எந்த ஆதாரமும் இல்லாமல் எப்படி ஒரு பெண்ணை நேசிக்கலாம் என்று சமூகம் இந்த அவனைப்பற்றியும் கேள்வி எழுப்பும். இதில் ஏதும் தவறு இருப்பதாய் எனக்கு தெரியவில்லை. ஆனால் சமூகம் அபாண்டமாய் பார்க்கும். நல்லவேளை அவன் சமூகத்தை பார்க்கவில்லை. பார்த்திருந்தால் ஒருவேளை அவன் நிம்மதி இழந்திருக்கலாம். இன்று என்னைப்போல் இன்னொரு பூங்காக் கதிரையில் அவன் தனித்திருந்திருக்கலாம்.

காதல் என்ற வார்த்தை மீதே கடுங்கோபத்தில் இருந்த நான் இன்று இந்த அவனையும் அவளையும் கண்டு இப்படி இலயித்து நிற்பதற்கு அப்படி என்ன காரணம் தெரியுமா?

அவன் அதிஷ்டத்தை பற்றி எண்ணுகிற நான் அவன் துரதிஷ்டத்தை பற்றியும் எண்ணாமல் இல்லை. அவனால் இதற்கு மேல் அவன் காதலியிடத்தில் நெருங்க முடியாது. ஏன்?
செய்து வைத்த ஒளிச்சிற்பம் தானே! எப்படி நெருங்க முடியும்? ஆனாலும் நான் பொறாமை கொள்கிற அவனது பேரதிஷ்டம் என்ன தெரியுமா?

அவன் காதலி அவன் பார்வைக்கு ஒளி மங்கவே மாட்டாள். அவள் பார்வைக்கு அவனும் ஒளிமங்கமாட்டான். இருவரும் காதலித்துக் கொண்டே இருப்பார்கள்.

***மின்சாரம் உள்ளவரை***
***அந்தக்காதல் நிலைக்கும்.***

## தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் நடைபெற்ற குழந்தைகளுக்கான ஏடு தொடக்கல்

தைப்பூச தினமான 25.01.2024 அன்று தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் செஞ்சொற்செல்வர் அவர்களினால் ஏடு தொடக்கி வைக்கப்பட்டது. பல பகுதிகளிலிருந்தும் பெருமளவான குழந்தைகள் பெற்றோருடன் வந்து அம்பாளை தரிசித்து தாம் கல்வியில் சிறந்து விளங்க வழிபாடு மேற்கொண்டனர்.



# ஈழக்குயிலே...! கவனம்...!

அளவுக்கு மிஞ்சினால்
அமிர்தமும் நஞ்சாம்...
அட.. அட.. அட..
அது சரி...!
அந்த அளவு, எந்த அளவு?

ஒரு பருக்கை போதும் எறும்புக்கு
ஒரு கைப்பிடி போதும் பறவைக்கு
ஒரு அகப்பை போதும் பூனைக்கு
ஒரு கோப்பை போதும் மனிதனுக்கு



ஆளுக்கு ஏற்ப
அளவு மாறும்...!
பசிக்கு ஏற்ப
அளவு மாறும்...!
உனக்கு போதும் என்றது
எனக்கு போதாது..

அவளை கொண்டாடவில்லை என்று சிலர்
அவளை அதிகம் கொண்டாடி விட்டார்கள் என்று சிலர்
அவள் சந்தித்து விட்டாள் என்று சிலர்
அவளை சந்தித்து விட்டார்கள் என்று சிலர்
அவள் அங்கே வரவில்லை என்று சிலர்
அவள் இங்கே ஏன் போனாள் என்று சிலர்

அவளை ஆளுக்கொரு பக்கமாக இழுக்கிறார்கள்...!
அவள் உலகம் தெரியாதவள் - ஆனால்
அவளை உலகத்திற்கு தெரியும்
அதுதான் பிரச்சினை...!



உன் வாயை மூடிவிட முயல்கிறார்கள் கவனம்...!
உன் காதுகளை இறுக மூடிக் கொள்
வென்றவர் கதைகளின் சாரம் அதுதான்
கடல் தாண்டி வென்றவள் நீ
கண்டங்கள் தாண்டியும் வெல்ல வேண்டும்
கலையும் கடவுளும் அருள வேண்டும்.

**தொண்டரடிப்பொடியன்**

## நிலவில் தரை இறங்கிய ஜப்பான்



ஜப்பானின் ஸ்மார்ட் லேண்டர் ஃபார் இன்வெஸ்டிகேடிங் மூன் (SLIM) நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கியது. இவ்வாறு நிலவில் தரையிறங்கிய 5-வது நாடு என்ற பெருமையை ஜப்பான் பெற்றிருக்கிறது.



# சிறு நடுத்தர நிறுவன (SME) வளர்ச்சிக்கான அரசாங்கத்தின் கொள்கைகள்

ப. டியனி

இலங்கை அரசாங்கத்தின் ஒட்டுமொத்த கொள்கை நோக்கங்களில் ஒரு முக்கியமான மூலோபாய துறையாக சிறு நடுத்தர நிறுவன (SME) துறை அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இது உள்ளக பொருளாதார வளர்ச்சி, பிராந்திய அபிவிருத்தி, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வறுமை குறைப்பு போன்ற மாற்றத்திற்கான உந்துதலாகவும் காணப்படுகிறது.

சிறு நடுத்தர நிறுவன துறையானது பின்தங்கிய பகுதிகளை வளர்ந்து வரும் செழுமைமிக்க பகுதிகளாக மாற்றுவதற்கும் பங்களிப்புச் செய்கிறது. இலங்கை அரசாங்கமானது சிறு நடுத்தர வணிகங்களை பொருளாதாரத்தின் முதுகெலும்பாக அங்கீகரித்துள்ளது, ஏனெனில் இது மொத்த நிறுவனங்களின் 75%க்கும் அதிகமான பங்களிப்பைக் கொண்டுள்ளதுடன், 45% வேலைவாய்ப்பையும் வழங்குகிறது அத்துடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 52% பங்களிப்பை வழங்குகிறது. சிறு நடுத்தர நிறுவனமானது பரந்த அடிப்படையிலான சமத்துவ வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பங்கேற்புக்கு அதிக வாய்ப்பையும் வழங்குகிறது.

உலகமயமாக்கல் போக்குடன், SME துறையானது "பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பு" துறையாக மட்டும் பார்க்கப்படாமல், அதைவிட முக்கியமாக "வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான" உந்து சக்தியாகவும் உள்ளது. எனவே, வளர்ந்துவரும்

சவால்களை எதிர்கொள்வதற்கும் சிறு நடுத்தர வணிகங்களை ஒரு செழிப்பான துறையாக அபிவிருத்தி செய்வதற்கும் இத்துறைக்கு தேசிய மற்றும் சர்வதேச போட்டித்தன்மையை மேம்படுத்துவது அடிப்படையில் முக்கியமானது என்பதை இலங்கை அரசாங்கம் அங்கீகரிக்கிறது. சிறு நடுத்தர வணிக துறையின் சவால்களை எதிர்கொள்ளும் தன்மையைக் கருத்தில் கொண்டு நாட்டின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்தத் துறையை மேம்படுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் அரசாங்கம் தலைமையிலான தலையீடு மற்றும் ஆதரவு பொறிமுறையைக் கொண்டிருப்பது முக்கியமாகும்.

சிறு நடுத்தர வணிக கொள்கைக் கட்டமைப்பானது, இன்றைய உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தில் அவர்களின் முழு திறன்களை உணரவைக்கும் வகையில் நம்பிக்கைக்குரிய சிறு நடுத்தர வணிகங்களின் திறன்களை மேம்படுத்துதல் மற்றும் வணிக சூழலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தக் கொள்கைக் கட்டமைப்பானது சிறு நிறுவனங்களை



நடுத்தர நிறுவனங்களாகவும், நடுத்தர அளவிலான நிறுவனங்கள் பெரிய நிறுவனங்களாகவும், பெரிய நிறுவனங்கள் உலக அளவில் போட்டித் தொழில்களாக வளரவும் ஊக்குவிக்கும்.

## அரச கொள்கை தலையீடுகள் மற்றும் உத்திகள்

சிறு நடுத்தர வணிக கொள்கைக் கட்டமைப்பானது கொள்கை வழிமுறை, எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் மற்றும் பரந்த தலையீட்டு உத்திகள் ஆகியவற்றை பரந்த அளவில் உருவாக்கும். அரச கொள்கை தலையீடானது, சுற்றுச்சூழலை செயற்படுத்தல், நவீன பொருத்தமான தொழில்நுட்பம், தொழில் முனைவோர் கலாச்சாரம் மற்றும் திறன் மேம்பாடு, நிதி அணுகல், சந்தை வசதி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, பிராந்திய சமநிலை மற்றும் வளப் பயன்பாடு போன்ற எட்டு முக்கிய பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

### சூழலை செயலப்டுத்துதல்

இலங்கை அரசாங்கமானது, சிறு நடுத்தர வணிக அபிவிருத்திக்கான சாதகமான சூழலை நிறுவுவதற்காக, போட்டித்தன்மை மற்றும் ஆதரவை மேம்படுத்துதல், வியாபாரம் செய்வதை எளிதாக்குவதற்கு முறையான ஒருங்கிணைப்பு மற்றும் எளிமைப்படுத்தல் நடைமுறைகளை பகுத்தாய்வு செய்தல் உட்பட சட்டமியற்றுதல், ஒழுங்கமைப்பு

மற்றும் நிறுவன கட்டமைப்பை மேம்படுத்துதல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது.

### முக்கிய உத்திகள்:

சிறு நடுத்தர வணிகங்களுக்கான சட்ட சூழலை வலுப்படுத்த சிறு நடுத்தர வணிக நட்பு சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் உள்ளடங்கிய ஒப்பந்த அமலாக்கத்தை வடிவமைத்து செயல்படுத்துதல். சிறு நடுத்தர வணிகங்கள் தொடர்பான அமைச்சுகள், துறைகள், சட்டப்பூர்வ வாரியங்கள், பிற பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் சேவை வழங்கலின் தரம் மற்றும் விரிவாக்கத்தை மேம்படுத்துதல். SME களுக்கு ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம் ஒரே இடத்தில் சேவை வழங்கல். பொதுவான சேவை மையங்கள், தொழிற்பேட்டைகள், களஞ்சியப்படுத்தல் வசதிகள், புவியியல் இருப்பிட அடிப்படையிலான வசதிகள் மற்றும் SME நிறுவன கிராம மேம்பாடு உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளை ஆதரித்து மேம்படுத்துதல். முக்கியமாக குறைந்த வளர்ச்சியடைந்த பகுதிகளில் கவனம் செலுத்துதல். வலுவான பொது தனியார் உரையாடல், பங்குடைமை ஏற்பாடுகள் மற்றும் தொழில்துறை சங்கங்களின் வளர்ச்சியை வலுப்படுத்துதல். தொழில் தொடங்குதல் மற்றும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் நடைமுறைகளை எளிதாக்குதல் உட்பட கணக்கியல் தரங்களையும் எளிமையாக்குதல். பசுமை வளர்ச்சி வாய்ப்புகள் குறித்து SME களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சுற்றுச்சூழலுக்கு உகந்த தூய்மையான உற்பத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துதல்.

### நவீன பொருத்தமான தொழில்நுட்பம்

தரம், புதுமையான, உற்பத்தி மற்றும் போட்டித் திறன் கொண்ட தயாரிப்புகளை அதிகரிக்கவும், சிறு நடுத்தர வணிகங்களுக்கு நவீன மற்றும் பொருத்தமான தூய்மையான தொழில்நுட்பங்களைப் பெறுவதற்கும் அரசாங்கம் உதவுகிறது. தொழில்துறைகளை பிராந்திய தொழில்மயமாக்கலில் கவனம் செலுத்தும் அதே வேளையில் அறிவு சார்ந்த, தொழில்நுட்பம் மிகுந்த தொழில்துறையை மேம்படுத்துவதை நோக்கி இயக்கப்படுகிறது.

### முக்கிய உத்திகள்:

சிறு நடுத்தர வணிகங்களுக்கான நவீன, தூய்மையான தொழில்நுட்பத்தைப் பெறுவதற்கும் அவற்றை ஏற்றுக்கொள்வதற்கும் ஆதரவளிக்க பொருத்தமான ஊக்கத் தொகைகளுடன்



தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் மேம்பாட்டு நிதியை Technology Transfer and Development Fund (TTDF) நிறுவுதல். சிறு நடுத்தர வணிகங்கள் மற்றும் தொழில்நுட்ப வழங்குனர்களிடையே வலுவான வலையமைப்பு தளம் மற்றும் இணைப்பை நிறுவுதல். சிறு நடுத்தர வணிகங்கள் நவீன தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்க சிறப்பு தொழில்நுட்ப பரிமாற்றம், பரவல் திட்டங்களை ஊக்குவித்தல் மற்றும் நடத்துதல். தொழில்நுட்ப வளங்கள் பற்றிய தகவல்களை சேகரிப்பதற்கும் பரப்புவதற்கும் தொழில்நுட்ப வங்கியை நிறுவுதல் மற்றும் வலுப்படுத்துதல். சந்தை உணர்திறன் பயிற்சி தேவைகளைப் பூர்த்தி செய்ய பாடநெறி உள்ளடக்கங்களை மேம்படுத்துதல் மற்றும் வளவாளர்களின் திறன் மேம்பாடு ஆகியவற்றின் மூலம் பயிற்சி மையங்களை வலுப்படுத்தவும். புதுமையான மற்றும் தொழில்நுட்ப முன்னணி SME களை அங்கீகரித்து வெகுமதி அளித்தல், மற்றும் வெளிநாட்டு வர்த்தக கண்காட்சிகள், தொழில்நுட்ப விளக்க மேடைகளில் பங்கேற்க அவர்களுக்கு உதவுதல். ஃபாஸ்டர் பல்கலைக்கழகம் (Foster University) - தொழில்துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக SME களுடன் ஆலோசனை செயல்முறையைப் பின்பற்றுவதன் மூலம், வணிக இணைப்புகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி பயிற்சி (Technical and Vocational Education Training (TVET) institutions) நிறுவனங்களின் பாடத்திட்ட மேம்பாட்டை உறுதி செய்தல்.

ஆராய்வோம்....

## ஜாம்பி வைரஸ்கள்

உலகில் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக செயலற்று இருக்கும் வைரஸ்கள் ஜாம்பி வைரஸ் என்று அழைக்கப்படுகிறது. இதற்கிடையே 48,500 ஆண்டுகளாக செயலிழந்து பனிக்கட்டிகளில் புதைந்திருந்த ஜாம்பி வைரஸ்களை ஆராய்ச்சியாளர்கள் கடந்த 2022-ம் ஆண்டு கண்டறிந்தனர். ஆர்க்டிக்கில் பனிக்கட்டிகள் உருகுவதால் ஜாம்பி வைரஸ்கள் வெளியே வர வாய்ப்பு உள்ளது. இதனால் பேரழிவு தரும் உலகளாவிய சுகாதார அவசர நிலையைத் தூண்டக்கூடும் என்றும் புவி வெப்பமடைதல் காரணமாக அதிகரித்து வரும் வெப்பநிலையால் உறைந்த பனிக்கட்டிகள் உருகத் தொடங்கியதில் இருந்து இந்த அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.






த.விதுர்ஷன்
மாணவன், கொழும்பு பல்கலைகழகம்.

# தற்கொலைகளால் தடமழியும் தலைமுறைகள்

மனிதன் ஒரு சமூக விலங்கு. அப்படியிருக்கையில் தற்கொலை என்பது முற்றிலும் தனிநபர் சார்ந்தது என்று வரையறுத்துவிட முடியாது என்கிறார் எமிலி டேர்க்ஹெய்ம். அவர் தற்கொலைக்கு ஒரு சமூக இயல்பும் உள்ளது என்றும் கலாச்சாரகூறுகளும் அதற்கு காரணமாக இருப்பதாகவும் கூறுகின்றார்.

உளவியல் நிபுணர் தோமஸ் ஈ ஜோய்னியரின் தற்கொலைக்கான உள்ளுணர்வு கொள்கையின்படி "தற்கொலை மீது விருப்பம் இல்லாதவராலும், தற்கொலையை நிறைவேற்ற முடியாதவராலும், தற்கொலையைச் செய்ய முடியாது" என்கிறார். அதாவது தற்கொலைக்கான விருப்பமும் தற்கொலை செய்துகொள்வதற்கான வல்லமையும் உள்ள ஒருவரே தற்கொலையயைச் செய்ய முடியும் என்கிறார். இதற்கு அவர் இரு உள்ளுணர்வு கட்டமைப்புகளை முன்வைக்கிறார் ஒன்று நான் இன்னொருவரில் தங்கியிருக்க வேண்டியுள்ளது என்ற கற்பனை எண்ணப்பாடும், நான் நிராகரிக்கப்படுகின்றேன் என்ற எண்ணப்பாடும் இதற்கு காரணமாக உள்ளன.

தற்போது தற்கொலை சாதனமாக "தூக்கிடுவது" முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. தற்கொலைக்கு இந்தப் பொருட்களின் நுகர்வை, பாவனையை, பரிமாற்றத்தைத் கட்டுப்படுத்தியதன் மூலம் இலங்கையில் சனத்தொகை அடர்த்தி குறைந்த விவசாய கிராமங்களில்

தற்கொலை வீதம் சடுதியாக வீழ்ச்சி அடைய ஆரம்பித்தது. இப்பொழுதெல்லாம் விசமருந்தி தற்கொலை செய்பவர்களின் வீதம் வெகுவாக வீழ்ச்சி அடைந்துள்ளது. தற்போது தூக்கிட்டு கொள்வதே தற்கொலைக் கருவியாக உள்ளது.

தற்போது தற்கொலைச் சாதனமாக தூக்கிடுவது முக்கிய இடத்தைப்பிடித்துள்ளது. தூக்கிடுவதற்கு பயன்படுத்தப்படும் கயிறு, சேலை, கட்டித் தொங்கப் பயன்படும் வளை என்பன நாளாந்த வாழ்வியலின் அம்சங்களாக இருப்பதால் அதனை கிடைக்காமல் செய்வது அவ்வளவு இலகுவான விடயம் அல்ல. ஆனால் கயிறு போன்றவற்றை பெறுவதில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்த முடியும். சட்டப்படி கூரைகள் இவ்வளவு உயரமாக இருக்க வேண்டும் என்ற விதிமுறைகள் ஏற்படுத்தப்படலாம். இவற்றின் மூலம் இலகுவில் தூக்கிடுவதற்கான வாய்ப்புகளை இல்லாமல் செய்ய முடியும். வடக்கு, கிழக்கில் நிலைமை இவ்வாறு இருக்க, இலங்கை சனத்தொகையில் 100,000க்கு 14 அல்லது 15 பேர், தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றார்கள் எனக் குறிப்பிடப்படுகின்றது.

30 வயதுக்கும் குறைந்தவர்களே, அதாவது 15-24 வயதுக்குட்பட்டவர்களே அதிகளவில் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றார்கள் என அண்மைக்கால ஆய்வுகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது. தற்கொலைகளைத் தவிர்ப்பதற்கு ஒவ்வொரு பிரஜை மத்தியிலும் ஒரு தன்னம்பிக்கை ஏற்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு மாணவனும் தன்னம்பிக்கையோடு முன்னேற வேண்டும். அப்போது தான், உலக நாடுகளுள் நாம் முன்னேற்றமடைய முடியும்.

இவ்வாறு தற்கொலைகளைத் தடுப்பதற்கான வழிமுறைகளையும் திட்டங்ளையும், இலங்கை அரசாங்கமும் வகுக்க வேண்டும். பிரச்சினை இல்லாமல் வாழ்க்கை இல்லை பிரச்சினையே வாழ்க்கையும் இல்லை. எனினும், நம்பிக்கைத் துரோகத்துக்கு உயிர்களை மாய்த்து, தன்னுயிரை மாய்ப்பதுதான் தீர்வென்றால், பிறந்த குழந்தை முதல் சகலருமே ஒவ்வொரு நாளும் உயிரைப் பலமுறை மாய்த்து கொள்ளவேண்டும். வாழ்வதற்கு உதவியவர்களை ஏமாற்றக்கூடாது ஏமாந்துவிட்டோம் என்பதற்காய், வாழ்க்கையை வெறுக்கவும் கூடாது. இவ்வுயிர் உன்னுடையது அல்ல. அதைப் பலவந்தமாய் உன்னால் பிடுங்கிக்கொள்ள இயலாது அடுத்தவர்களின் உயிர்களையும் பிடுங்க முடியாது. ஆகவே, இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழப் பழக்கிக்கொண்டால்,



யாருக்கும் இவ்வுலகில் பிரச்சினையே இருக்காது.

ஒருவரிடம் தற்கொலை எண்ணம் மேலோங்கி இருப்பதை அறிய வெளிப்படையாக பேசுதல் அவசியம். நாம் தற்கொலைப் பற்றி பேசுவதால் ஒருவர் தற்கொலைக்கு தூண்டப்படுவாரோ என்ற பயம் தவறானது. மனச்சோர்வுடன் தற்கொலை எண்ணம் கொண்டிருப்பவரிடம் அவரின் உணர்வுகளைப் பகிர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் போது, அவர்களுக்கு நம்பிக்கை பிறக்கும். சரியான சிகிச்சை மனச்சோர்வையும், தற்கொலை எண்ணத்தையும் மாற்றும்.

சட்டத்தின் பார்வையில், தற்கொலை முயற்சி குற்றமாக பார்க்கப்பட்ட காலம் மாறி, அது சிகிச்சை தரப்பட வேண்டிய மனரீதியான சிக்கல் என்றே கருதப்படுகிறது. இந்த வருடம் உலக தற்கொலை தடுப்பு தினத்திற்கான கருப்பொருள் "Working together to Prevent Suicide" என்பதே. தற்கொலை தடுக்கப்படக் கூடிய ஒன்றுதான். கூட்டு முயற்சி தற்கொலையின் எண்ணிக்கையையும், தாக்கத்தையும் குறைக்கும் என்பதில் ஐயமில்லை. இதற்கு முதல்படி, தற்கொலைப் பற்றிய விழிப்புணர்வை, உங்கள் சமூக வட்டத்தில் ஏற்படுத்துங்கள். மனச்சோர்வு, மனநல மருத்துவ சிகிச்சை முறைகளால் குணப்படுத்தக்கூடிய ஒன்று என்பதை உணருங்கள். உங்கள் நண்பர்களோ, உறவினர்களோ, முன்பு போல் உற்சாகமாக இல்லை, எதிர்காலத்தின் மீது நம்பிக்கையை இழந்து பேசுகிறார்கள் என்றால், அவர்களை விட்டு விலகாதீர்கள். அவர்களுடைய மனதில் எதிர்மறை எண்ணங்கள் புதைந்து கிடக்கிறதா என்பதை கனிவாகப் பேசி கண்டறியுங்கள்.



என்ன செய்வது என்று தெரியமால் தவறான முடிவை எடுக்கும் பலருக்கு உங்களுடைய ஆறுதலான வார்த்தையும் சிகிச்சைக்கு சரியான வழிகாட்டுதலும், மிக முக்கியம். தற்கொலை எண்ணம் மாறி, உற்சாகத்துடன் மீண்டு வரும் ஒருவரின் புன்னகை நமக்கு ஏற்படுத்தும் மனநிறைவை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. தற்கொலையை தடுப்பதற்கு உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கு உண்டு.

முற்றும்.

# தொடரச்சியாக நடைபெறும் துர்க்கா தேவி வீட்டுத்திட்டம் ...

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் பல்வேறு சமூக நலப் பணிகளில், ஒன்றாக இல்லப் பிள்ளைகளிற்குரிய உதவித் திட்டமான, வீட்டுத்திட்டப் பணிகளில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட 4 வீடுகள் இன்று திறந்து வைக்கப்பட்டது.

29.01.2023 காலை 8.00 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் விசேட பூஜை நடைபெற்று அதனைத் தொடர்ந்து தெய்வ திருவுருவப் படங்கள், எடுத்துச் செல்லப்பட்டு புதிதாத நிர்மானிக்கப்பட்ட 4 வீடுகளும் திறந்து வைக்கப்பட்டது. இவ் நிகழ்வில் பிரதேச செயலாளர் கலந்து சிறப்பித்து இது போன்ற சமூகப் பணிகளுக்கு தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

துர்க்கை அம்பாளின் அருளால் யாம் கண்ட கனவு நனவாகிறுது. எங்கள் இல்லத்தில் சிறுபிள்ளைகளாக வந்து சேர்ந்து.கற்று , இல்லறவாழ்வில்



இணையும் ,நாம் வளர்த்த அன்புப் பிள்ளைகளுக்கு இனாமாக வீடு கொடுக்க வேண்டும் என்று கடந்த 2010 இல் எடுத்த முயற்சி வீண்போகவில்லை. இதுவரை 9 வீடுகள் சீதணமாகக் கொடுத்தோம். தற்பொது மேலும் 4 வீடுகள் கட்டும்பணி நிறைவடைந்து அவற்றை திறந்து வைத்துள்ளோம்.

எமது இல்லப் பிள்ளைகளின் சகல உயர்விற்கும் நாங்கள் எமது உயர்ந்த அர்ப்பணிப்பினை வெளிப்படுத்தி நல்லவற்றை என்றும் செய்வோம் என தெரிவித்தார் செஞ்சொற்செல்வர்.







# கம்பருக்கு பதிலடி கொடுத்த ஔவையார்

தான் 500 பொன் பெற்று ஏழையாக்கிய சிலம்பியை ஔவையார் கூழுக்குப் பாடிச் செல்வச் செழிப்பு மிக்கவளாக்கி விட்டதைக் கேள்வியுற்ற கம்பர் ஔவையார் மீது துவேஷம் கொண்டார். ஒரு நாள் ஔவையார் அரசவைக்கு வருகை தந்தார். அப்பொழுது கம்பர் அவரை நோக்கி ஆரைக்கீரைக்கும் ஔவைக்கும் சிலேடையாக அதாவது இரு பொருள் படும்படியாக ஔவையையும் ஆரக்கீரையையும் ஒப்பிட்டு,

”ஒரு காலடீ, நாலிலைப் பந்தலடீ”
என்று கூறினார். இதற்கு உத்தரமாக ஔவையார்,
”எட்டேகால் லட்சணமே, எமனேறும் பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே முட்டமேற்க்
கூரையில்லா வீடே, குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னாயது.”




தமிழில் ”அ” அன்பது எண் 8 ஐக் குறிக்கும் ”வ” 1.˙.4 ஐக் குறிக்கும். 8, 1.˙.4 இரண்டையும் சேர்த்தால் ”அவ” என வரும்.

எட்டேகால் லட்சணமே என்றால் ”அவ லட்சணமே” எனப் பொருள் படும். எமனேறும் பரி எருமை. எமனேறும் பரியே என்றால் ”எருமையே” எனப்பொருள் படும். மட்டில் பெரியம்மை வாகனமே என்றால் ”மூதேவியின் வாகனமே” என்று பொருள். கூரையில்லா வீடு குட்டிச் சுவர். கூரையில்லாவீடே என்றால் ”குட்டிச் சுவரே” என்று பொருள்.

”குலராமன் தூதுவனே” என்றால், ராமாயணத்தை எழுதியவனே என்றும், ராமனுக்குத் தூது சென்ற ஹனுமானான ”குரங்கே” என்றும் பொருள் படும். ”ஆரையடா சொன்னாயது” என்றால் நீ சொன்னதன் பொருள் ஆரக்கீரையென்றும் யாரைப் பார்த்து இப்படிச் சொன்னாய் என்றும் இருபொருள்படும். இத்துடன் ”அடா” என்ற அடைமொழி சேர்த்துத் தன்னை ”அடி” என்றதற்குப் பதிலடி கொடுத்தார்.



T. திவிகா
யாழ் பல்கலைக்கழகம்

# டெரிடாவின் கட்டவிழ்ப்பு நோக்கில் பாலினக் கருத்தியல்கள்

மேலைத்தேய மெய்யியலின் சமகால வளர்ச்சிப் போக்குகளில் ஒன்றாக பின்நவீனத்துவம் அமைகின்றது. இரண்டாம் உலகப்போருக்குப் பின் 1950களில் இக்கருத்தாக்கமும் சொல்லாட்சியும் இலக்கியத் திறனாய்வில் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. Post modern என்பது நவீனத்திற்குப் பிந்தியது. இதனை முதன்முதலில் 1917இல் ஜேர்மன் மெய்யியலாளரான றூ டோல்.்.ப் பான்விற்ஸ் (Rudolf Pannwitz) பயன்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்நவீனத்துவம் கலைகள், இலக்கியம், அரசியல், சமயம், அதிகாரம் எனப் பல துறைகளையும் மீள்வாசிப்பிற்கும் கட்டவிழ்ப்பிற்கும் உட்படுத்தியது. பின் நவீனத்துவக் கருத்தியல்களை எடுத்துக்காட்டியவர்களாக டெரிடா (Derrida), மிக்ஷல் பூக்கோ (Michel Foucalt), றோலண்ட் பார்த் (Roland Barthes), றிச்சார்ட் றொட்றி (Richarad Rorty) எனப் பலர் காணப்படுகின்றனர். டெரிடாவின் கட்டவிழ்ப்பு சிந்தனையை அடிப்படையாகக்கொண்டு சமூகத்தில் நிலவும் பாலினம் தொடர்பான கருத்தியல்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## கட்டவிழ்ப்புவாதம் அறிமுகம்

இலக்கியத் திறனாய்வின் ஒரு புதிய பரிமாணத்தை குறிப்பதற்கு பயன்படும் பதம் கட்டவிழ்ப்பு (Deconstruction) ஆகும். கட்டவிழ்ப்பு என்பதனை 1967இல் பிரெஞ்சு மெய்யியலாளரான டெரிடா தனது Of Grammatology எனும் நூலில்

அறிமுகப்படுத்தினார். உண்மையில் இது ஒரு வாசிப்பு முறை ஆகும். அதாவது பனுவல் ஒன்றில் (நூல் அல்லது இலக்கியம்) அவதானிக்கத் தவறிய விடயப்பரப்புகளை மீள்வாசிப்பு செய்யும் தத்துவ ஓட்டமாகும். ஆரம்பத்தில் கட்டவிழ்ப்பு வாசிப்புமுறையானது இலக்கிய விமர்சனங்கள் மற்றும் மெய்யியல் எழுத்துக்களின் போது மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

கட்டவிழ்ப்பு பல பின்நவீனத்துவப் பண்புகளை வெளிப்படுத்தும் எண்ணக்கருவாக அமைந்துள்ளது. அதாவது, அமைப்பு என்பது மாற்றமடையக் கூடும் என வலியுறுத்தல், குறிப்பானின் (சொல்) அர்த்தமானது என்றும்



மாற்றமடையாதவை அல்ல மாறாக அர்த்தம் மாற்றமடையும், ஆசிரியனை மையப்படுத்திய சிந்தனையை நிராகரித்து வாசகனை மையப்படுத்திய சிந்தனைக்கு முதன்மையளித்தல், விளிம்புநிலைக் கருத்துக்கள் பற்றிப்பேசுதல் போன்ற பின்நவீனத்துவப் பண்புகளை வெளிப்படுத்துவதாகவுள்ளது.

சமூகங்கள் சில கருத்தாக்கங்களை எவ்வாறு பேசுவது அவை பற்றிப் பேசுவது அவசியமான ஒன்றல்ல எனக் கருதி சிலவற்றை விளிம்பு நிலையில் வைத்துள்ளன. இந்தவகையில் பாலியல் (Sexual) சார்ந்த விடயங்கள், பால் (Sex) சார்ந்த கருத்துக்கள் போன்றன சமூகத்தினரால் விளிம்பு நிலைக்குள் கொண்டுவரப்பட்டவை. பின்நவீனத்தின் கட்டவிழ்ப்புச் சிந்தனை விளிம்புநிலைக் கருத்துக்களை முதன்மைப்படுத்தி பேசுவதாகவே காணப்படுகின்றது.

இதனடிப்படையில் இதுவரை காலமும் விளிம்புநிலைக் கருத்தாக்கமாகக் கருதப்பட்டு வந்த பாலினக் கருத்தியல்கள் விளிம்புநிலைக்குக் கொண்டு சேர்க்கப்பட வேண்டியவையல்ல என்பதனை எடுத்துரைப்பதாகவே இக்கட்டுரை அமைந்துள்ளது. பாலினக் கருத்தியலை சமூகத்தில் இதுவரைகாலம் வழக்கில் காணப்பட்ட அமைப்பு முறை அடிப்படையிலும் அதனோடு தொடர்புடைய சொற்களின் அர்த்தங்கள் தொடர்பான தற்கால வேறுபாட்டு நோக்குகளின் அடிப்படையிலும் ஆராய்வதாக இக்கட்டுரையானது அமைந்துள்ளது.

## பால், பால்நிலை அறிமுகம்

சமூகங்களில் பால், பால்நிலை ஆகிய இரு பதங்கள் பற்றிய தெளிவான விளக்கங்கள் இல்லை என்பது முக்கியமான ஒரு விடயமாகும். இவை தொடர்பான தெளிவின்றி பால், பால்நிலைக் கருத்தியல்கள் தொடர்பாக ஆராய முடியாது.

பால் (Sex) என்பது உயிரியல் ரீதியான கருத்து என்பதுடன் அது பிறப்பினாலே தீர்மானிக்கப்படுவதாகும். பிறந்த குழந்தைகளின் வெளியக உடற்கூற்றுத் தோற்றப்பாட்டின் அடிப்படையில் பொதுவாக அவர்களது பால் அடையாளப்படுத்தப்படுகின்றது. ஒரு மனிதனின் பால் என்பது குரோமோசோம்கள், ஹோர்மோன்கள், உள்ளக வெளியக இனப்பெருக்க உறுப்புகள் ஆகியவற்றின் உடன் கூட்டிணைப்பே ஆகும். இதன் அடிப்படையிலே மனிதர்கள் ஆண்இ பெண் எனப் பாகுபடுத்தப்படுகிறார்கள்.

பால்நிலை (Gender) என்பது சமூகக் கட்டமைப்பினாலே தீர்மானிக்கப்படுவதாக உள்ளது. சமூகரீதியாகக் கட்டியெழுப்பப்பட்ட பழக்கவழக்கங்கள், செயற்பாடுகள் என்பனவற்றை ஆண்களுக்குப் பொருத்தமானவை பெண்களுக்குப் பொருத்தமானவை எனத் தீர்மானித்து முடிவெடுக்கின்ற நிலைமை பால்நிலை ஆகும். எடுத்துக்காட்டாக, பெண் புடைவை அணிதல், ஆண் வேட்டி சட்டை அணிதல் போன்றனவற்றைக் குறிப்பிடலாம். பால்நிலை வெளிப்பாடு (Gender Expression) என்பது பால்நிலையின் வெளியக விவரிப்புகள், ஒருவரின் பெயர், ஆடைகள், தலைமுடி, நடத்தை, உடல் தன்மைகள் ஆகியவற்றின் ஊடாக வெளிப்படும் அம்சங்களை குறித்து நிற்கிறது. இவற்றின் மூலம் சமூகம் ஆண் மற்றும் பெண் தன்மை என்பனவற்றை அடையாளப்படுத்துகிறது.

பாலின அடையாளம் (Gender Identity) என்பது பிறப்பு மூலம் ஒரு மனிதன் பெறும் பாலில் இருந்து வேறுபட்டது. ஒரு நபர் தனது பிறப்பிற்கு மாறாக தன்பாலை எவ்வாறு உளரீதியாக உணர்ந்து நோக்கிறாரோ அதுவே அவரின் பாலாகக் கருதுவதனைக் குறிக்கும். ஒரு ஆண் அல்லது பெண் மனரீதியாகவும் அதற்கேற்ப செயற்படுவதுடனும் அல்லது புரிந்துகொள்வதுடனும் தொடர்புடைய ஒன்றாகும். இது ஒரு நபரின் பாலின உணர்வுடன் ஆழமாகத் தொடர்புடைய ஒன்றாகும். எடுத்துக்காட்டாக, மாற்றுப்பால் இனத்தவர்கள் பிறப்பின் போது



அளிக்கப்பட்ட பாலிற்கு மாறாக தம்மை உணர்வதனைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

## கட்டவிழ்ப்பு பார்வையில் பாலினக் கருத்தியல்கள்

சமூகத்தில் பல்வேறுபட்ட மக்கள் வாழ்ந்து வருவதனை நோக்கக் கூடியதாகவுள்ளது. அவர்கள் மதம், மொழி, இனம், தொழில், பால் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபட்டுக் காணப்படுவதனை அறியக் கூடியதாகவுள்ளது. 1948இல் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சாசனம் மனிதர்கள் அனைவரும் சமம் என்று வெளியிட்டுள்ளது. இந்தவகையில் அனைவரும் சமமாகக் கருதப்பட வேண்டும். ஆனால் தற்கால சமூகங்களில் அனைவரும் தம்மில் வேறுபாடுகளைக் காண்பதிலே ஆர்வம் காட்டுகின்றனர்.

தற்காலத்தில் LGBTIQA+ எனும் சமூகக் கட்டமைப்பு உருவாகியுள்ளது. இச்சமூகம் பாலியல் அடையாளங்களின் படி பாலியல் தன்மை, பாலியல் விருப்பம், பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் LGBTIQA+



எனும் வேறுபட்ட பல குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுள் LGBTIQ ஆகியோரை முதன்மைப் படுத்தியே இக்கட்டுரையானது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதனுள் Lesbian, Gay, Bisexual, Transgender, Intersex, Queer போன்றோர் காணப்படுகின்றனர். LGBTIQ சமூகம் என்பதனைக் கேட்டவுடன் அவதூறான பேச்சுக்கள், வசைக் கருத்துக்கள் என்பன இடம்பெறுவதனைக் காணக்கூடியதாக உள்ளது. ஏனெனில் சமூகத்தில் வழக்கத்தில் இல்லாத ஒரு புதிய எண்ணக்கருவாக உள்ளதுடன் இவற்றினைப் பற்றி சமூகத்தில் பேசமுடியுமா? இவை பேசப்பட முடியாதவை என எண்ணி வைத்திருப்பதனாலும் இவ் கட்டமைப்புக்கள் கீழ் நோக்கி நசுக்கப்படுகிற தன்மையினைக் காணமுடியும்.

மனிதர்கள் ஒவ்வொரு விடயம் சார்ந்தும் ஒரு மையத்தினை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றனர். இதன் காரணமாக அவற்றுக்கு இணக்கமாக இல்லாதவற்றை விடுத்து மனிதர்கள் விலகி நிற்பதனை அவதானிக்கலாம். எடுத்துக்காட்டாக, கிறிஸ்தவ சமயம் மையமாகவுள்ள சமூகங்களில் வேறு சமயங்களான இந்து, இஸ்லாம், பௌத்தம் போன்ற சமயங்கள் விளிம்புக்கு தள்ளப்பட்டுள்ளமையினைக் குறிப்பிடலாம். கட்டவிழ்ப்பு வாசிப்பு முறை மையவாத நிலைப்பாட்டினை நிராகரிப்பதன் மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட விளக்கங்கள் ஒரு

பனுவலில் சாத்தியமானது என்பதனை எடுத்துக்காட்டுகிறது.

ஆரம்பத்திலிருந்து மனிதர்கள் பால் (Sexuality) அடிப்படையில் ஆண், பெண் என வகைப்படுத்தப்படுகிறார்கள். அனைவரும் ஆண், பெண் எனும் மையத்தை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்டமையால் தற்போது சமூகத்தில் நிலவி வரும் மூன்றாம் பாலினர் என்ற கருத்தாக்கம் ஆரம்பத்தில் இருந்து வந்த ஆண், பெண் எனும் கருத்தியலோடு இணக்கமாக இல்லாமையினால் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டுக் காணப்படுகிறது. பல்வேறு மக்களது கோரிக்கைளின் பிண்ணனியிலேயே இக்கருத்தியல் தற்போது ஓரளவு வெளிக்கொணரப்பட்டு வருகின்றது.

இந்தவகையில் மாற்றுப்பாலினத்தவர் (Transgender), இடையலிங்கம் அல்லது ஊடுபால் (Intersex), புதுமையர் (Queer), ஆகியோர் உள்ளடங்குகின்றனர். இவர்கள் பற்றிப் பார்ப்போமாயின்,

### மாற்றுப்பாலினத்தவர் (Transgender)

பிறப்பின் போது காணப்படும் பாலிற்கு மாற்றமாக வேறு பாலின அடையாளம் மற்றும் பாலின வெளிப்பாடு காட்டும் அல்லது உணரும் நபர்களை உள்ளடக்கியது. எதிர்ப்பாலினுடைய நபர்களாகத் தங்களை அடையாளம் கண்டுகொள்வார்கள். அதற்கான உயிரியல் ரீதியான காரணம் அந்த நபரின் மனம் பாலியல் உறுப்புக்களுடன் இணங்காது. அதற்குப் பதிலாக எதிர்ப் பாலினத்தைச் சார்ந்த மனதின் செயற்பாட்டைக் கொண்டிருக்கும். மாற்றுப்பால் ஆண் (Transgender man) என்பவர் பெண்ணாகப் பிறந்து தனது வேறுபட்ட பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகளை உணரும் தன்மை வாய்ந்தவர்கள். மாற்றுப்பால்



பெண் (Transgender woman) என்பவர் ஆணாகப் பிறந்து தனது வேறுபட்ட பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடுகளை உணரும் தன்மை வாய்ந்தவர்கள்.

### இடையலிங்கம் அல்லது ஊடுபால் (Intersex)

ஒரு நபர் ஆண்இ பெண் பாலினப் பண்புகளான ஹார்மோன்கள்இ குரோமோசோம்கள்இ இனப்பெருக்க உறுப்புக்கள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் போது பயன்படுத்தப்படும் சொற்பதம் இதுவாகும்.

### புதுமையர் (Queer)

புதுமையர் என்பது ஆண்இ பெண் எனும் பாலிற்குள் சேராதவிடத்து உபயோகிக்கப்படும். இவர்கள் தமது பால்நிலையை ஆணிற்கும் பெண்ணிற்கும் இடைப்பட்ட ஏதோ ஒரு இடத்தில் வரையறுப்பார்.

கட்டவிழ்ப்பு வாசிப்பு முறையின் கீழ் பால் தொடர்பான கருத்தியலை நோக்குமிடத்து ஆண்இ பெண் என்ற சமூகக்கட்டு தளர்க்கப்பட்டு விட்டதனை சமூகங்களில் நோக்கக் கூடியதாகவுள்ளது. அதாவது தற்போது ஆண், பெண், மூன்றாம் பால் என வடிவமைக்கப்பட்டுள்ளது.

கட்டவிழ்ப்பு வாசிப்பு முறையின் கீழ் பால் தொடர்பான கருத்தியலை நோக்குமிடத்து ஆண், பெண் என்ற சமூகக்கட்டு தளர்க்கப்பட்டு விட்டதனை சமூகங்களில் நோக்கக் கூடியதாகவுள்ளது. அதாவது தற்போது ஆண், பெண், மூன்றாம் பால் என வடிவமைக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாகவே ஒரு சொல் பல்வேறு அர்த்தங்களைச் சுட்டும். எடுத்துக்காட்டாக, "படி" எனும் சொல் படித்தல், மாடிப்படி, தராசின் நிறைப்படிகள் போன்றவற்றினைச் சுட்டுவதனைக் குறிப்பிட்டுக் கொள்ள முடியும். பாலியல் நாட்டம் (Sexual orientation) என்பது ஒரு நபர் மீது உடல், உளவியல் மற்றும் காதல் ஈர்ப்பினைக் கொண்டிருப்பதனைக் குறிக்கும் சரியான அறிவியல் ரீதியான சொற்பதமாகும். இச் சொல்லின் அர்த்தத்தின் அடிப்படையில் ஆண்இ பெண் ஆகிய இருவருக்குமான எதிர்ப்பால் (Heterosexual) ஈர்ப்பினையே அனைவரும் அதிகம் எண்ணுவார்கள். ஆனால் தற்கால சமூகங்களில் இச்சொல்லாடல் ஒத்தபாலினர் மற்றும் இருபால் சேர்க்கையாளர் ஆகியோரது உணர்வுகளையும் உள்ளடக்கி நிற்கிறது. அவையாவன,

**ஓரினச்சேர்க்கையாளர் (Homo sexual) –** தன் பால் இனத்தோரைக் கவர்பவர்களை ஓரினச்சேர்க்கையாளர் என்கின்றனர். ஒரு ஆண் மற்றொரு ஆண் மீது உடல், உளவியல்



மற்றும் உணர்ச்சி ரீதியான ஈர்ப்பினைக் கொண்டு காணப்பட்டால் Gay என அழைக்கப்படுகின்றனர். அதேபோல் ஒரு பெண் மற்றொரு பெண் மீது உடல், உளவியல் மற்றும் உணர்ச்சி ரீதியான ஈர்ப்பைக் கொண்டு காணப்பட்டால் Lesbian என அழைக்கப்படுகின்றனர்.

இருபால் சேர்க்கையாளர் (Bisexual) – தன் உடல், உளவியல் மற்றும் உணர்ச்சி மிக்க ஈர்ப்புக்களை தனது ஒத்தபால் நிலை கொண்டவரிடமோ அல்லது எதிர்ப்பால்நிலை கொண்டவரிடமோ வெளிப்படுத்தக் கூடிய ஆற்றலுடைய நபர்கள் இதில் உள்ளடங்கப்படுகின்றனர்.

மேற்குறிப்பிட்டது போல் குறிப்பானின் அர்த்தம் பலவற்றை இணைத்துக் கொண்டுள்ளமையினைப் புரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

பாலியல் நாட்டம் (Sexual orientation) எனும் எண்ணக்கருவினை அடிப்படையாக வைத்து திருமண முறைகள் பல்வேறு கோணங்களில் மாற்றமடைந்து வந்துள்ளமை யினையும் தற்கால சமூகங்களில் காணக்கூடியதாக வுள்ளது. திருமணம் என்பது ஆண், பெண் இருவருக்கு இடையில் இடம்பெறுவது அனைவரும் அறிந்த ஒரு விடயமாகும். மரபுவழி திருமணம் என்பது எதிர்ப்பாலினருக்கு இடையிலே இடம்பெற்று வருவதாகும். சமகாலங்களில் அந்தப் பழகிப்போன சார்புகள் மாற்றமடைந்துள்ளமை யினைக் காணக் கூடியதாகவுள்ளது.

அதாவது ஒரே பாலினத்தைச் சேர்ந்தோர் திருமணம் செய்து கொள்ளும் தன்மை நடைமுறையில் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். இந்தியா மற்றும் வேறு பல நாடுகளின் அரசாங்கமானது அவ்வாறான திருமணங்களை ஏற்றுக் கொண்டுள்ளதுடன் அரசியலமைப்புச் சட்டங்களிலும் அனுமதி தந்துள்ளன.

மாறாக இலங்கை அரசாங்கம் இவ்வாறான திருமணங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. அதாவது இலங்கைச் சட்டங்களின்படி ஓரினச் சேர்க்கை குற்றமாகும். 1833ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தண்டனை சட்டக்கோவையின் பிரிவு 365 மற்றும் 364(அ) பிரிவுகளால் ஓரினச்சேர்க்கை ஒரு தண்டனைக்குரிய குற்றமாக அடையாளப்படுத்தப்படுகின்றது. இந்த வகையில் ஓரினச்சேர்க்கையினை ஏற்றுக்கொள்ளாத தன்மையினைக் கொண்டே அத்தகைய திருமணங்கள் ஏற்றுக்கொள்ளப்படாத தன்மையினைப் புரிந்துகொள்ள முடிகிறது.



உண்மையில் அறிவியல் அடித்தளத்தில் தங்கியிருப்பதற்கு மனிதனது ஆழ்நிலையில் எந்தவிதக் கட்டமைப்போ, கோட்பாடோ, விஞ்ஞானமோ, அரசியல் கட்டமைப்போ இல்லை என டெரிடா குறிப்பிடுவது சரியானதே. அறிவியல் வளர வளர மையம் தகர்க்கப்பட்டு புதிய சிந்தனைகள் தோற்றம் பெற்று அவதானிக்கப்படாதவையும் அவதானிக்கப்படுவதுடன் புதிய மாற்றங்களும் வந்து சேர்வதாகவே உள்ளன.

LGBTIQ சமூகம் என்பதனை எடுத்து நோக்கும் பொழுது காதல், திருமணம் என்பதனை மட்டும் கவனத்திற் கொள்ளக்கூடாது. இவர்கள் தொடர்பான திரைப்படங்கள் பலவும் இவற்றை மட்டுமே அதிகம் மையப்படுத்தி எடுத்துள்ளமையினை நாம் கண்டு கொள்ளலாம்.

ஆகையினால் நவீன ஊடகங்களில் நாட்டம் கொண்ட தற்கால மனிதன் காதல், திருமணம் குறித்த தன்மையினைக் கொண்டே LGBTIQ சமூகத்தினரை நோக்க முற்படுகின்றான். இதனால் தவறான புரிதல்களையே பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.

LGBTIQ சமூகத்தினர் கல்வி பற்றி பெரும்பாலும் சிந்திப்பது குறைவு. மாணவர்கள் பாடசாலையில் எவ்வாறான கேலிகள் கிண்டல்களுக்கு உள்ளாகிறார்கள் என்பது பற்றி ஆராய முற்படுவது இல்லை. அதேபோல் அவ் மாணவர்களது கற்றல் சூழலினை எவ்வாறு மாற்றியமைக்க முடியும் எனப் பலர் சிந்திக்கத் தவறுகிறார்கள். மேலும் LGBTIQ சமூக மக்களின் உடல், உள ரீதியிலான தன்மைகளை அவர்களே புரிந்துகொள்வதற்கான தெளிவான விளக்கங்கள் வழங்கப்படுவதிலும் அவர்களை ஏனையோர் புரிந்துகொள்வதிலும் சிரமங்கள் உள்ளன.

சமூகங்களில் LGBTIQவின் அங்கீகாரம் எவ்வளவு தூ ரம் உள்ளது. அவர்களுக்குரிய தொழில் வாய்ப்புக்கள் சரியான முறையில் கிடைக்கின்றனவா? தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதில் எவ்வாறான சிரமங்களை எதிர்கொள்கிறார்கள்? தொழில் புரியும் இடங்களில் அவர்களுக்கு விளைவிக்கப்படும் பிரச்சினைகள் போன்றவை பற்றி சிந்திக்கும் தன்மை நம்மில் பலருக்கும் இல்லை. அடுத்து சுகாதார வசதிகள்



போதுமான அளவு கிடைக்கின்றனவா என்பதும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

கட்டவிழ்ப்பு ஒரு எண்ணக் கருவோடு தொடர்புபட்டதாகப் பல்வேறு கருத்துக்கள் காணப்படும் என எடுத்தியம்புகிறது. இதனடிப்படையில், மேற்கூறப்பட்ட விடயங்களில் இருந்து LGBTIQ சமூகத்தினரின் வாழ்வியலை எடுத்துப்பார்க்கும் பொழுது, காதல், திருமணம் என்பதனோடு மாத்திரம் நின்றுவிடவில்லை மேலும் கல்வி, சமூக அங்கீகாரம், சுகாதாரம், தொழில், உடல், உள புரிதல்கள் ஆகியவையும் அவர்களோடு சார்ந்து உள்ளன. LGBTIQ சமூகத்தினர் மேற்குறிப்பிட்ட அனைத்தையும் போராடிப் பெறுகின்றனர் என்பதே நிதர்சனமான உண்மை.

சமகாலங்களில் விழிப்புணர்வு செயலமர்வுகள் நடாத்தப்படுவதோடு கல்வித்திட்டங்களிலும் இது தொடர்பான விளக்கங்கள் வழங்கப்படுவதனால், முன்னைய காலங்களை விட அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறைவடைந்துள்ளன என்றே கூறலாம். பெயர்மாற்றம் மற்றும் பாலினமாற்றம் போன்றவற்றிற்கு அரசாங்கங்கள் பல அனுமதி தந்துள்ளமை சிறப்பான ஒரு விடயமாகும். அதுமட்டுமன்றி LGBTIQ சமூகத்தினர் கல்வி கற்கின்றனர்; பல்கலைக்கழகங்கள் வரை செல்கின்றனர். அத்துடன் நல்ல தொழில் வாய்ப்புக்களையும் பெறுகின்றனர்; இருப்பினும் முற்று முழுதாக அவர்களது பிரச்சினைகள் தீர்ந்து போகவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ்வுலகில் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு தேவைக்காகவே இறைவனால் படைக்கப்படுகின்றான். அனைவரும் சமமானவர்கள் என்பது உண்மையே. மனிதனானவன் மாற்றங்களை விரும்பி ஏற்றுக்கொள்ளக் கூடியவன். அதாவது நவீன தொழில்நுட்ப யுகத்திலே மாற்றத்திற்கு அடிமையான மனிதன் அனைத்து மாற்றங்களையும் ஏற்றுக்கொள்ளக் கூடியப் பக்குவப்பட்டவனாகவே காணப்படுவான். கதைக்கக் கூடாது என சில விடயங்களைப் புறந்தள்ளுவதனாலே பிற்பட பிரச்சினைகள் எழுகின்றன. விளிம்புநிலைக் கருத்துக்கள் என்று சிலவற்றைப் புறந்தள்ளுவது தவறு. கட்டாயம் இவை பேசப்பட வேண்டியவை ஏனெனில் அடுத்த தலைமுறையினருக்கு இவ்வாறான கருத்துக்கள் தொடர்பான ஆழமான புரிந்துணர்வுகள் கிடைக்கும் என நம்புகின்றேன்.



# துர்க்கையம்மன் மஹா கும்பாபிஷேகப் பணிகள்...

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேக பணிகள், தற்பொழுது சிறப்புற நடைபெற்று வருகின்றது. தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேகம் வரும் 25.03.2024ம் திகதி நடைபெற அன்னையின் திருவருள் கூடியுள்ளது.

இந்தப் பணிகளை உரிய காலத்தில் முழுமையாக முடிவுறுத்தி எங்கள் அம்பாளின் மஹா கும்பாபிஷேகத்தினை மிகவும் சிறப்புற நடாத்துவதற்குரிய முழுமையான பணிகளை எமது தேவஸ்தானம் மேற்கொண்டு வருகின்றது.

எமது இந்தப் பணிகளுக்கு உலகெங்கும் பரந்து வாழும் அன்னையின் பக்தர்களிடம் இருந்து உதவிகளை எமது தேவஸ்தானம் வேண்டி நிற்கின்றது.

எனவே எமது வேதவஸ்தானத்தின் காரியாலயத்தில் நேரடியாகவோ அல்லது எமது வங்கி இலக்கங்கள் ஊடாகவோ தங்களது உதவிகளை எமது அன்னையின் திருப் பணிகளுக்கு பக்தர்கள் தங்களது உதவிகளை வழங்க முடியும்.

உலகப் புகழ்பெற்ற எங்கள் தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேகப் பணிகள் யாவும் சிறப்புடன் நிறைவு பெற பக்தர்களின் தாராள உதவிகளை நாங்கள் வேண்டி நிற்கின்றோம்.

இந்தப் பணிகளுக்கு தங்களின் உதவிகளை வழங்கும் பக்தர்கள் எமது அலுவலகத்தில் அதற்குரிய பற்றுச் சீட்டினை பெற்றுக் கொள்ள முடியும். வங்கிகளில் வைப்பிடும் பக்தர்கள், thurkaiammantemple@gmail.com என்ற எமது மின்னஞ்சல் முகவரிக்கு தங்களின் விபரங்களை அனுப்பி வைக்குமாறு பணிவுடன் வேண்டி நிற்கின்றோம்.

**வங்கி இலக்கங்கள்**
**இலங்கை வங்கி சுன்னாகம் கிளை, கணக்கு இல:~07470940 அல்லது 77683985,**
**கொமர்ஷல் வங்கி சுன்னாம் கிளை, கணக்கு இல:~ஊ1107000214**

மேலும் விபரங்களுக்கு https://www.tellidurga.org/donate-us/ என்ற எமது இணையத்தள முகவரியினை பார்வையிடுங்கள்.



நன்றி

செஞ்சொற்செல்வர்,
தலைவர், துர்க்கா தேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

# அபயம் இரகசியம் பேணும்

## இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை

# 071 07 12345



**மனநெருக்கடிகளில் இருப்பவர்களும், அவர்களது உள்ளம் உயிர் காக்க துணை நிற்பவர்களும் தொடர்பு கொள்ளக்கூடிய அவசர அழைப்பு**

(போதைப்பொருள் பாவனையில் இருந்து மீள நினைப்பவர்களும் இச் சேவையை பயன்படுத்தலாம்)



தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் மற்றும் தகவல்கள் யாவும் இரகசியமாக பேணப்படும்.

**24 மணிநேரமும் வைத்தியரையும், ஆலோசகரையும் உடனடியாக தொடர்பு கொள்ளலாம்**

பாதிக்கப்பட்டவர்களோ அல்லது அவர்களை காண்பவர்களோ (உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள்) இச்சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பங்குனி 2021

அபயம் நிறுவனம்
மானிப்பாய், யாழ்ப்பாணம்



ஐ.வி.மகரசேனன்

1

# என் காலகள் வழியே...

புதிதா ஒன்றை முயற்சிக்கலாம் என்ற எண்ணங்களுடனுயே இத்தொடருக்கான பிள்ளையார் சுழியை போடுறன். புதிதாக ஆரம்பிப்பதற்கு முன்னர், அப்புதிய முயற்சிக்கான அறிமுகமாகவே இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆம். இன்று *Travel Blogs* எனும் காணொளி வடிவில் பயணக்குறிப்புகள் பரிணமித்து வருகையில், நான் மீள செல்கிறேன் வரி வடிவில் என் பயண நினைவுகளை சமுகத்துடன் பகிர்ந்து கொள்வதற்கு. இதில் நான் என் பார்வைக்குள் என் எண்ணங்களுக்குள்ளால் அகப்பட்டதை உங்கள் எண்ணங்களுக்குள் விதைத்திட எடுக்கும் முயற்சியே ஆகும்.

என் ஒழுக்கத்தையும் இவ்அறிமுகத்திற்குள் சொல்றது தான் தொடர்ச்சியான வாசிப்புக்குள் என் எண்ணத்தின் ஒழுக்கப்புரிதலுடன் இணைந்து பயணிக்க ஏதுவாக அமையும். எனது இளங்கலைமானி மற்றும் அதன் பின்னரான கல்வியை சார்ந்து எனது ஒழுக்கம் அரசறிவியலை மையப்படுத்தியதாக அமைகின்றது. அதன் பின்புலத்திலேயே கல்லை பார்க்கும் என் பார்வையும் சிந்தனையும் அந்த கல்லின் மீது காணப்படும் அரசியல் அதிகாரத்தை நோக்கியதாகவே அமையும். பயணங்களில் நான் சந்தித்ததும், சிந்தித்ததும் பலதும் அவ் ஒழுக்கத்துக்குள்ளேயே அதிகம் சுழலுவது சகயமானதாக காணப்படும்.

எழுத்து உருவாக்கத்தின் பின்புலத்தையும் இங்கு இணைப்பது, வாசிப்பவர்களுக்கு இன்னும் சில வாசிப்புக்கான களத்தை திறக்க பயனுடையதாக அமையும். ஆம். நான் சே குவேராவின் தீவிர ரசிகன். போராட்டங்கள் நிறைந்த தேசிய இனத்தில் வாழும் பிரஜையாயினும், இப்படியும் ஒருவன் வாழ முடியுமா எனத்திகைத்து ரசிப்பது அந்த "சே"க்கு நிகர் எவருமில்லை என்பதே என் எண்ணங்கள். ஆம். இவர் வேறுவழி. சரி, சே குவேராவிற்கான புகழ்மாலை குறிப்பிற்கான காரணம். என் பயணக்குறிப்பு எழுத்துக்களுக்கும் எண்ணங்களுக்கும் ஆத்மார்த்த பின்புலம் சேகுவேராவின் பயணம் சார் கருத்துக்களே ஆகும். சே குவேரா பற்றிய வாசிப்புக்களில் யாவும், "அர்ஜெண்டினாவில் தொடங்கி சிலி, பெரு, வெனிசூலா, பொலிவியா என்று லத்தீன் அமெரிக்க நாடுகளிடையே எர்னஸ்டோ அவரது நண்பன் ஆல்பர்டோ கிரனாடோவுடன் மேற்கொண்ட பயண அனுபவங்கள்" நிச்சயம் தவிர்க்க இயலாத பதிவாகும். குழப்பம் வேண்டாம் எர்னஸ்டோ தான் சே குவேராவின் பெயர்.

1952ஆம் ஆண்டில் சே குவேரா மற்றும் ஆல்பர்டோ கிரனாடோவின் எட்டு மாத லத்தின் அமெரிக்கா சுற்றுப்பயணத்தில் சே குவேராவின் எண்ணங்களையும் பார்வைகளையும் நாட்குறிப்பாக பேணியுள்ளார். இவ்நாட்குறிப்பு 2003இல் சே குவேராவின் மகள் அலெய்டா குவேராவின் *(Aleida Guevara)* முன்னுரையுடன் மோட்டார் சைக்கிள் டைரிஸ் *(The Motorcycle Diaries 'Notes On Alatin American Journey')* எனும் நூலாக வெளிவந்துள்ளது.

இந்நூலில் சே தான் தரிசித்த நாடுகளின் அரசியல், சமூக, வரலாற்றுப் பின்புலத்தை ஒரு இளைஞனுக்குரிய குமுறலுடன் பதிவு செய்திருக்கிறார். இப்பயணத்தின் போது ஆல்பர்டோ கிரனாடோ, ஒரு இளம் மருத்துவர் மற்றும் அவரது நண்பர் எர்னஸ்டோ குவேரா, ஒரு புகழ்பெற்ற பியூனஸ் அயர்ஸ் குடும்பத்தைச் சேர்ந்த 23 வயதான மருத்துவ மாணவர், தங்கள் கண்டத்தை ஆராய முடிவு செய்தனர். அவர்கள் நார்டன் 500CC மோட்டார் சைக்கிளில் அர்ஜென்டினாவில் உள்ள கார்டோபாவிலிருந்து புறப்பட்டு சிலி, பெரு, கொலம்பியா மற்றும் வெனிசுலா வழியாக பயணித்தனர்.



இந்தப் பயணத்தின் அனுபவங்களே பின்னாளில் எர்னஸ்டோவை உலகின் முதன்மையான புரட்சியாளராக உருமாற்றியது. ஒரு தேர்ந்த மார்க்சிஸ்டாகவும், தீரமிக்கப் போராளியாகவும் வளர்த்தெடுத்தது. மக்களை நேசித்து, மக்களுக்காக வாழ்ந்து, மக்களுக்காக உயிர் துறக்கும் நெஞ்சுரத்தையும் மாண்பையும் பெற்றுத் தந்தது. எர்னஸ்டோ என்னும் சாமானியனை சே குவேராவாக உருமாற்றியது. இம்மாற்றத்தை லத்தின் அமெரிக்க நாட்டு பயணம் எவ்வாறு வடிவமைத்திருந்தது என்பதனை சே குவேரா தனது நாட்குறிப்பிலும், வாழ்க்கையிலும் நிறைவாக செதுக்கியுள்ளார். கியூபாவுக்காகப் போராடிய ஒரு அர்ஜென்டினன், தனது வாழ்நாள் முழுவதும் தனது புகழ்ச்சியில் ஓய்வெடுக்காமல், காங்கோவில் போரிடச் சென்றார். பொலிவியாவில் மற்றொரு போரில் தனது முடிவுக்கு வந்தார்.

உருகுவே பத்திரிகையாளர் மற்றும் எழுத்தாளர் எதுவர்டோ காலியானோ சே குவேராவின் லத்தின் பயணத்தை பற்றி, “ஒரு பயணம், பல பயணங்கள். சாகசத்தைத் தேடி எர்னஸ்டோ குவேரா, அமெரிக்காவைத் தேடி எர்னஸ்டோ குவேரா, சேவைத் தேடி எர்னஸ்டோ குவேரா, இந்தப் பயணப் பயணத்தில் தனிமை, ஒற்றுமையைக் கண்டது, “நான்” “நாம்” ஆக மாறியது என்கின்றார். அஃதே பயணத்தின் சிறப்பு.



பயணங்கள் புதியனவற்றை எம்மோடு இணைத்து விடுகின்றது. நாம் பார்த்தவற்றிலிருந்து புதிய உலகிற்கான தரிசனத்தை அளிக்கின்றது. அம்மாற்றத்தை சரியாக உள்வாங்குகையில் பயணிகள் யாவும் ஏதொவொரு வகையில் புதியவர்களாகின்றார்கள். அது சே ஆகவும் ஆஹலாம்! மாறாகவும் நிகழலாம்! எவ்வாறாயினும் பயணம் மாற்றத்தின் ஆதாரம் என்பது நிதர்சனம்.

சே அளித்த உந்தலுடன் இந்த சேனன் தனது இந்திய பயணத்தில் என் பார்வையில் பட்டவற்றை எனது எண்ணங்களுக்குள் பதிந்தவற்றை என் எழுத்துக்குள் சுருக்கி தொடராக உருவாக்க முனைகிறேன்.

என் பயணத்துடன் உங்களையும் அழைத்து செல்ல அடி எடுத்து வைக்கிறேன்.

*பயணிப்போம்!*

# மனங்கள் மாற வேண்டும்...!

வர்ணி (ஜரா) சச்சிதானந்தம்,
முள்ளியவளை.

ஏல விற்பனைச் சந்தையிலே
இலவசமாய் விலை போகிறது
இன்றைய நாட்டு நடப்பில்
அரிசியோ... பருப்போ... என எண்ணிடாதீர்!
அது தற்கொலை

தற்கொலைகள் ஆவிநிலை தருவனவடா
இது கருடனின் ஏகாந்தம்
எமனே! என் உயிரை எடுக்க நீ யாரடா?
நானே என் உயிரை மாய்ப்பேன் எனும்
அடாவடித் தனத்தின் உச்சகட்டம் தற்கொலை

காதல் தோல்வியா தற்கொலை
கடன் தொல்லையா தற்கொலை
திருமணப் பிரச்சினையா தற்கொலை
படிப்பின் உச்சகட்டமா தற்கொலை
பாலியல் தொந்தரவா தற்கொலை
பகிடிவதையா தற்கொலை


ஏதோ... உலக அரங்கில் ஓட்டப்பந்தயமாம்
இலங்கை நான்காம் இடமாம்...
ஓட்டப்பந்தயமல்லவே...
தற்கொலைகள் அதிகம் நிகழ்வதில்
இலங்கை பெற்ற இடமிதுவாம்.

நஞ்சுண்டு
தூக்கிட்டு
நெருப்பில் விழுந்து
கிணற்றில் பாய்ந்து
ஆற்றில் விழுந்து
கடலில் குதித்து
கழுத்தறுத்து
கையறுத்து
ரயிலில் பாய்ந்து
எத்தனையோ கன்றாவிகளை நேருக்கு நேர்
பார்த்துத் துடிக்கிறது எம் நெஞ்சம்



சாதனை வீரனாம் தற்கொலை புரிந்து விட்டேன்
என்னை உலகுக்கு நிரூபித்து விட்டேன்
என்பது முயலுக்குக் கொம்புள்ள
கதையாய் போனதடா...
மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில்
மரண ஓலம் அடிக்கடி கேட்குதய்யா
உதிரம் கொடுத்து உயிர் தந்தாளே
உன் தாய் உனக்குத் தெரியவில்லையா?
உழைத்து உழைத்து உன் உடல் வளர்த்தாரே
உன் தந்தை உனக்குத் தெரியவில்லையா?

அர்த்தமற்ற சாவில் ஏதடா சரித்திரம்...?
பாடசாலை சீருடைக்காய் தூக்கிட்டாள்
ஓர் ஏழைச் சிறுமி
தூக்கிட்ட நாளிலே!
நல்லூரான் தலை மேலே தங்க ஓடு
கயிற்றில் கண்டம் நெரித்து
தூக்கில் நீ தொங்கிட வேண்டாம்
நஞ்சருந்தி நா எரிந்து
நாசமாய் போயிட வேண்டாம்
எண்ணெய் ஊற்றி எரியூட்டி - நீ
வெந்து நொந்து கருகிட வேண்டாம்
கடுகதியில் ஓடும் ரயிலில் பாய்ந்து
கை பாதி கால் பாதியாய் உருவிழந்து
உயிர் துடிக்க வேண்டாம்



அசடே!
வாழ நினைத்தால் வாழலாம்
வழியா இல்லை உலகினில்
உழைப்பவனது உதிரம் உறிஞ்சும்
பண முதலைகள் மட்டும்
உயிரோடிருக்க
உமக்கேன் தற்கொலை?

ஏதுமறியா பிஞ்சுகளை
நஞ்செண்ணம் கொண்ட வஞ்சகர்கள்
தம் வலையில் சிக்க வைத்து
சீரழித்து இன்பம் காணும்
ஈனப் பிறவிகள் மட்டும் உயிரோடிருக்க
உமக்கேன் தற்கொலை?

தற்கொலையின் விளைவு
சொர்க்கம் நரகம் இரண்டும் இல்லையடா
நடுவெளியில் அந்தரத்தில்
அலைவாய் ஆவியாக
நான் புதிதாய் சொல்லவில்லை
கருடன் சொன்னதடா
இதில் அர்த்தம் உள்ளதடா

சிந்திப்பதற்கு சிறுதுளி நேரம் காணும்
அஞ்சி அஞ்சி வாழ்ந்து
அவனியில் அமைதியிழந்து
துஞ்சி வாழும் கூட்டங்களாய்
கூனிக் குறுகிக் குவலயத்தில்
கண் விழிப்பதற்கு
நிமிர்ந்தெழு!
நீதிக்காய் குரல் கொடு!
உன் கண்ணெதிரே கலைந்திடும் தீயவர் கூட்டம்
அவர் மார்பிலே வேலைப் பாய்ச்சு
புது உலகம் படைத்திட கோலை ஓச்சு!

## பணக்கார குடும்பம்



உலகின் பணக்கார குடும்பங்களின் பட்டியலில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் ஷேக் முகம்மது பின் சையத் அல் நஹ்யான் குடும்பம் முதலிடத்தில் உள்ளது. அல் நஹ்யான் 2022-ம் ஆண்டு ஒட்டுமொத்த ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைவராக பொறுப்பேற்றார். ஐக்கிய அரபு அமீரகத் தலைநகர் அபுதாபியில் உள்ள கஸ்ர் அல்-வதன் மாளிகையில் நஹ்யான் குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இங்கு அல் நஹ்யானின் 18 சகோதரர்கள், 11 சகோதரிகள், 9 குழந்தைகள், 18 பேரக் குழந்தைகள் என 56 பேர் வசிக்கின்றனர்.

இந்த மாளிகையில் 3,50,000 படிகங்களால் ஆன சர விளக்கு, மதிப்புமிக்க வரலாற்று கலைப்பொருட்கள் உள்ளன. இந்த குடும்பத்திடம் 700 சொகுசு கார்கள் மற்றும் 8 ஜெட் விமானங்கள் உள்ளது. உலகின் மொத்த எண்ணெய் வளத்தில் நஹ்யான் குடும்பத்தின் வசம் மட்டும் 6 சதவீதம் உள்ளது. உலகின் மிகப் பெரிய நிறுவனங்களில் இக்குடும்பத்தினர் முதலீடு செய்துள்ளனர்.

# மிகப்பிரமாண்ட பொங்கல்த் திருவிழா

இலங்கை வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மிகப் பிரமாண்டமாக பொங்கல் விழா ஒன்று கிழக்கிலங்கையில் நான்கு நாட்களாக இடம்பெற்றுள்ளது.

தமிழரின் வரலாற்று பொங்கல் நிகழ்வில் வரலாறு காணாத நடன ஆற்றுகையை நிகழ்த்திய கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்கள்.



இலங்கை வரலாற்றில் முதன்முறையாக ஜல்லிக்கட்டு விளையாட்டு இலங்கை இந்திய ஜல்லிக்கட்டு ஆர்வலர்களின் ஒத்துளைப்புடன் சம்பூர் மண்ணில் நடத்தப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மாபெரும் படகோட்டப்போட்டி கிண்ணியாவிலே நடைபெற்றது. அதோடு ஆயிரத்திற்கு மேற்பட்ட பானைகளில் பொங்கல் பொங்கும் நிகழ்வும் நடைபெற்றது. மற்றும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான குழு ரீதியான கோலப்போட்டி மற்றும் சிலம்பம் போட்டி என்பனவும் நடைபெற்று இளம் தலைமுறையினருக்கு தமிழர்



பாரம்பரியத்தை அறிவிக்கும் நிகழ்வாக இவ்விழா சிறப்புப் பெற்று இருந்தது.

மேலும் ஒரு வரலாற்று சாதனை நிகழ்வாக 1500 பாடசாலை மாணவர்கள் பங்கேற்ற மாபெரும் நடன நிகழ்வு திருகோணமலையில் இடம்பெற்றது. இவ் நடன நிகழ்வின் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த மட்டக்களப்பு அம்பாறை திருகோணமலை மாவட்ட பாடசாலைகளை சேர்ந்த மாணவ மாணவிகள் பங்குபற்றியிருந்தனர். இவ் நடன ஆற்றுகை பார்ப்போரை பிரமிப்பூட்டும் வகையில் கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# சாதனை வீரன் சமார் ஜோசப்

எஸ்.எஸ்.நஜன்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான பிரிஸ்பேன் டெஸ்ட் போட்டியில் (போட்டியின் 4ம் நாள்) மிட்சேல் ஸ்டார்க் வீசிய யோக்கர் பந்தினால் வலது காலில் உபாதைக்கு உள்ளாகி இருந்தார், மேற்கிந்தியத் தீவுகளின் புது வரவான சமார் ஜோசப். வலி நிவாரணிகள் எடுத்து, முழுமையாக குணம் அடையாமல் இருந்தாலும், அடுத்த நாள் (போட்டியின் 5ம் நாள்) மிக அவதானமாக பந்து வீச தயாராகினார்.

இது ஜோசப்பின் இரண்டாவது போட்டி. அடிலெய்ட்டில் நடந்த முதல் போட்டியில் தனது டெஸ்ட் அறிமுகத்தின் முதல் பந்திலேயே ஸ்டீவன் ஸ்மித் தினை ஆட்டமிழக்க செய்தது மட்டுமல்லாமல் தன் துடுப்பாட்டத்தையும் ஆஸ வீரர்களுக்கு காட்டியிருந்தார். இருப்பினும் அந்த போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் தோற்றது.

ஆனால் இந்த போட்டியில், ஏழு இலக்குகள் 68 ஓட்டங்களுக்கு என்ற பந்து வீச்சுப் பெறுதி மூலம் மேற்கிந்தியத் தீவுகளை எட்டு ஓட்டங்களால் வெற்றி பெற செய்தார். தனியொருவனாக இந்த போட்டியின் போக்கையே மாற்றி, தன் பெயரை டெஸ்ட் கிரிக்கெட்டில் பதித்தார். இது மேற்கிந்தியத் தீவுகள் அவுஸ்திரேலியாவில் 27 வருடங்களுக்கு பின்னர் பெறும் முதல் டெஸ்ட் வெற்றியாகும்.

இவ்வாறானதொரு திறமையை அவுஸ்திரேலிய மண்ணில் வெளிப்படுத்திய மேற்கிந்தியத் தீவுகளின் வீரர் என்று பார்த்தால் 1993 இல் கேட்லி அம்புரோஸ்,



அலன் போர்டர் தலைமையான ஆஸிக்கெதிராக எடுத்த ஒரு ஓட்டத்திற்கு ஏழு இலக்குகள் என்ற பெறுதியே கூறமுடியும். இப்பெறுதியை எடுக்கும் போது அம்புரோஸ் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட கிரிக்கெட் ஜாம்பவான், ஆனால் ஜோசப் இப்போது தான் தன் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றை எழுத தொடங்கியுள்ளார்.

ஜோசப், தனது இரண்டாவது பந்து பரிமாற்றத்தின் ஐந்தாவது பந்தை வீசும் போது ஆஸி 113 ஓட்டங்களுக்கு இரு இலக்குகளை மாத்திரம் இழந்து வெறுமனே 103 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் தனது அடுத்த வெற்றியை நோக்கி சென்று கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



24 வயதான ஜோசப், ஐந்து வருடங்களுக்கு முன்பு ஹயானாவின் 350 பேர் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் (ஆபிரிக்க அகதிகள் முகாமில்) வாழ்ந்து வந்தார். இடைநிலை பாடசாலைகளே இல்லாத நிலையில் அங்கு கிடைக்கும் பழங்களை கொண்டு பந்து வீசியும் கயிற்றில் கட்டிய பந்தை துடுப்பால் அடித்து தன் கிரிக்கெட் தாகத்தை தீர்த்துக் கொண்டார். 2018 இல் தான் தொலைத்தொடர்பும் வலையமைப்பும் இந்த பிரதேசத்திற்கு கிடைத்தது குறிப்பிடத்தக்கது.



இங்கிருந்து நியூ ஆம்ஸ்டர்டாம்க்கு குடியேறிய ஜோசப், காவலாளியாக 12 மணிநேரம் பணிபுரிந்தார். கடந்த 2023 இல் கரிபியன் பிரிமியர் லீக்கில் அறிமுகமாகி, 2023 இன் இறுதியில் மேற்கிந்தியத் தீவுகளின் ஏ அணிக்காக தேர்வு செய்யப்பட்டார்.

இது பாரகராவில் இருந்து புறப்பட்ட சாமர் ஜோசப்பின் நேரம். வருங்காலத்தில் இந்த போட்டி, சாமர் ஜோசப்பின் போட்டியாகவே பேசப்படும்.

# ஜானிக் சின்னர் ஒரு கிராண்ட்ஸ்லாம் சாம்பியன்

எஸ்.எஸ்.நுஜன்



ராட் லேவர் அரங்கில் ஞாயிற்றுக்கிழமை (ஜனவரி 28, 2024) இரவு நடந்த ஆஸ்திரேலிய ஓபன் 2024 ஆடவர் ஒற்றையர் பிரிவில், டேனியல் மெட்வெடேவுக்கு எதிராக, 3-6, 3-6, 6-4, 6-4, 6-3 என்ற கணக்கில் வென்று, உலகின் நம்பர்- 4 வீரரான சின்னர் தனது முதலாவது ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்றார். இது அவருக்கு முதலாவது கிராண்ட்ஸ்லாம் பட்டமும் ஆகும். "ஓலே, ஓலே, ஓலே, சின்-நெர், சின்-நெர்" மற்றும் இத்தாலியக் கொடிகளை ஏந்திய ரசிகர்களால் உற்சாகமடைந்த சின்னர், சாம்பியன்ஷிப் புள்ளியைப் பெற்ற பிறகு, வெற்றிக்களிப்பில் பின்புறமாக சரிந்தார்.

ஓபன் சகாப்தத்தில் AO ஒற்றையர் பட்டத்தை வென்ற முதல் இத்தாலியன், மற்றும் 22 வயதில், கிராண்ட்ஸ்லாம் பெற்ற தனது நாட்டின் இளைய வீரர் ஆவார். கடந்த 10 ஆண்டுகளில் நோவக் ஜோகோவிச், ர.ஃபா நடால் அல்லது ரோஜர் ஃ பெடரர் - இரண்டு தசாப்தங்களாக டென்னிஸில் ஆதிக்கம் செலுத்திய பல சாம்பியன்களின் மூவர், என்று பெயரிடப்படாத ஒருவர் AO ஒற்றையர் வெற்றியாளராகவும் மாற்றினார் .

விம்பிள்டனில் கார்லோஸ் அல்கராஸ் ஜோகோவிச்சை அதிர்ச்சிக்குள்ளாக்கினார். ஆஸ்திரேலியன் ஓபன் சாம்பியன்ஷிப்பை வெல்லும் வழியில், 24 முறை கிராண்ட்ஸ்லாம் சாம்பியனான ஜோகோவிச்சை, சின்னர் சுருட்டினார். ஆண்ட்ரே ரூப்லெவ், 10 முறை AO சாம்பியனான நோவக் ஜோகோவிச் மற்றும் மெட்வெடேவ் ஆகியோருக்கு எதிரான வெற்றிகளுடன், சின்னேர் பிறப்பதற்கு சில கிழமைகள் முன்னதாக - 1991 ஆம் ஆண்டு விம்பிள்டனில் மைக்கேல் முன்னணி 5 வீரர்களை கிராண்ட்ஸ்லாம் தொடரில் தோற்கடித்தற்கு பின், அவ்வாறு தோற்கடித்த இளைய இத்தாலியரானார்.

2024 ஆஸ்திரேலிய ஓபனில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் அரினா சபலெங்கா வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.